Registered as a News Paper பக்கங்கள்: 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 26 (09-02-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 356

## நிர்வாகசேவை பரீட்சை தமிழர் புறக்கணிப்பு

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையின் ''பகுதி பி'' பரீட்சை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற போது 208 பேர் பரீட்சைக்குத் தோற்றி இருந்ததாகவும் இதில் வடக்கு-கிழக்கிலிருந்து (தமிழ், முஸ்லிம்) பரீட்சார்த்திகள் எவருமே இடம்பெறவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி ''பகுதி ஏ'' பரீட்சையில் வடக்கு - கிழக்கில் இருந்து பரீட்சார்த்திகள் கலந்துகொண்டன (5ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசுக்கு எதிராக புலிகள் உலக நீதிமன்றில் வழக்கு

## 8000 தமிழரைக் கொன்றதாக குற்றச்சாட்டு

(லண்டன்)

8000 அப்பாவித் தமிழ் மக்களை இந்திய இராணுவம் கொன்றமை குறித்து இந்திய அரசிற்கு எதிராய் சர்வதேச நீதி மன்றத்தில் விடுதலைப் புலிகள் வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்திருப்பதாகவும், அது குறித்து தீவிர சட்ட ஆலோசனைகள் இடம் பெற்று வருவதாகவும், விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

1987 இல் உருவான இந்திய -சிறிலங்கா உடன்படிக்கையை ஏற்க மறுத்ததால் 1987-1990க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்கள் உயிரிழந்தார்கள். தமிழ்மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட மா பெரும் தீங்கியல் குற்றம் இது என்று பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அன்று முதல் இன்று வரை இந்திய அரசின் அனைத்துலக அறிக்கைகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் கண்ணியத்தையும், மதிப்பையும் குறைப்பதற்கு இந்தியஅரசு பாவித்து வருகிறது என்று பாலசிங்கம் குறிப்பிட்டார்.

எனவே விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனையும் பொட்டம்மானையும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யும் [6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆறு தமிழர் கொலை

கடந்த வருட இறுதியில் நெலுக்குளம் பகுதியில் இடம் பெற்ற சுறுப்புநரி இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 60 பொது மக்களில் 6 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது கடந்த வாரம் இச் சம்பவம் இடம்பெற்றதாக தெரியவரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கம் போராட்ட எதிரொலி ஊழியர் வேலை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தொண்டர்கள் மேற்படி சங்கத்தின் ஊழல் மற்றும் தன்னிச்சையான போக்கைக் கண்டித்து நடாத்திய மறியல் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் எதிரொலியாக இரு சிரேஷ்ட அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமைபுரியும் தொண்டர்களுக்கு பொறுப்பு வகிக்கும் ரி. ஜெயரட்ணம் என்பவரும், சிரேஷ்ட தொண்டர் படைத் தலைவர் ந.சிறிறஞ்சன் என்பவரும் இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

நேற்று நடைபெற்ற இச் சங்கத்தின் செயற் குழுக் கூட்டத்தில் மேற்படி போராட்டம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இக் கூட்டத்திலேயே மேற்படி இருவரையும் பதவி நீக்கம் செய்வது பற்றித் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இறுதியாகக் கிடைத்த தகவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகள்-படையினர் உக்கிரமோதல் கிழக்கில் 18 இராணுவத்தினர் பலி

## ஐந்து முனைகளில் இராணுவ நடவடிக்கையாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் மத்தியில் பல முனைகளில் பெரும் மோதல்கள் ஏற்பட்டுவருகின்றன. நேற்று முன் தினம் கரடியனாற்றிலும், நேற்று புலிபாய்ந்தகல்லிலும் நடைபெற்ற கடும் சண்டைகளில் மொத்தம் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஐந்து முனைகளில் பெரிய இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் லெப். கேணல் சந்திரசிறி பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், பகல் 11.30 மணியளவில் ஈராளைக்குளம் இராணுவ முகாமிலிருந்து இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் புறப்பட்டு கரடியனாறு முகாமிற்குச் சென்றுகொண்டிருக்கையில், மைலவெட்டுவான் என்னும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

நேற்று முன்தினம் கரடியனாற்றில் விடுதலைப் புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு.

★ ஆர். பி. ஜி - 01
★ 40 மி.மி. டொங்கான் - 01
★ ரி56 2ரகதுப்பாக்கிகள் - 04
★ ரி- 56-1 ரக துப்பாக்கி - 01
★ ரி- 56 புதிய பட் - மொடல் - 02
★ தொலைத்தொடர்பு சாதனம் - 01
★ ரி-56 மகசீன் - 18
★ நடுத்தர ரவைகள் - 270
★ ஏ.கே. எல் எம்ஜி லிங் - 75
★ ஏ.கே. எம் எம் ஜி ரம் மகசீன் - 01
★ ஏ. கே கோல்சர் - 05
★ பைனா குலர் - 01
★ சப்பாத்து - 03 சோடி
★ வரைபடம் - 01
★ மழை அங்கி - 03
★ மிதி வெடி அகற்றும் - சப்பாத்து - 01 சோடி
★ தண்ணீர் கான் - 05

## கரடியனாறு மோதலில் மூன்று புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

நேற்றுமுன்தினம் கரடியனாற்றில் சிறிலங்கா படையினருடனான மோதலில் மூன்று வீரவேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். அருள்நாதன் (தம்பிப்பிள்ளை பேரின்பராசா வெல்லாவெளி), இரவீந்தர் (சபாரத்தினம் உருத்திராபரன் பெரிய நீலாவணை) ஜஸ்ரின் ஆகிய மூவருமே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மீனவர் மீது தாக்குதல் கடலில் வீசப்பட்டனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இருவர் சிறிலங்கா படையினரால் தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டனர். அவர்களினது படகிலிருந்த எரிபொருளும் கடலில் வீசப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இரணைத்தாளை என்னும் இடத்தைச்சேர்ந்த யேசுராசா, சின்னராசா என்னும் இருவருமே படையினால் தாக்கப்பட்டவர்களாவர்.

ஜீவராசா, றெஜினோல்ட் ஆகியோரும் படையினரால் கடலில் வீசப்பட்டனர்.

## வர்த்தகர் கடத்தலில் இராணுவ அதிகாரி

(நுகேகொட)

இலக்கத் தகடற்ற வானில் வந்து நுகேகொடையில் வர்த்தகர் ஒருவரைக் கடத்திச் செல்ல முயற்சித்த ஆறு பேர் கொண்ட குழுவில் இராணுவக் கப்டன் ஒருவரும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தக் குழுவைப் பிடித்த அயலவர்கள் அவர்களைப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாயன்று பிற்பகல் 4 மணியளவில் நுகேகொடையில் இடம்பெற்றது.

இந்தக் கோஷ்டியில் ஒருவர் இராணுவ அடையாள அட்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் - குவேக்கர்ஸ் இன்று பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணம் வரும் சர்வதேச நிறுவனமான குவேர்க்கஸ் குழுவினர் விடுதலைப் புலிகளையும் இன்றே சந்தித்துப் பேசுவார்கள்எனத் தெரிய வருகின்றது. இப்பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினை பற்றி ஆராயப்படுமெனவும் தெரிய வருகிறது.

இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் நாயகம்யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வரும் சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரியான பயரே வெத்தாச் எதிர்வரும் பதின் மூன்றாம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள போது இங்குள்ள நிலைமைகளைக் கண்டறிவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக விடுதலைப் புலிகளுடனும் இவரது சந்திப்பு நிகழலாம் எனவும் தெரிய வருகிறது.

# 33 நீர்கொழும்பு மீனவர்கள் இந்தியா தடுத்து வைப்பு

(சென்னை)

நீர்கொழும்பைச் சேர்ந்த முப்பத்தி மூன்று மீனவர்கள் இந்தியக் கடல் பிராந்தியத்துக்குள் பிரவேசித்தார்கள் என்று தூத்துக்குடி, கன்னியாகுமரி கடல் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பதின்நான்கு மீனவர்கள் மூன்று படகுகளுடன் கன்னியாகுமரியில் பொலிஸ் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டதாக நீர்கொழும்பு இழுவைப் படகு உரிமையாளர் சங்கச் செயலர் ஜோர்ஜ் ஜே பெரேரா தெரிவித்தார். மற்றும் நான்கு படகுகளும் பத்தொன்பது மீனவர்களும் கேரளக் கரையோரக் கிராமமான கொச்சிப் பொலிஸ் காவலில் வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெ. விமான விபத்து 30பேர் பலி; 100 பேர் காயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் அமெரிக்க இராணுவ சரக்கு விமானம் ஒன்று விபத்துக்கு உள்ளாகியது. இந்த விபத்தில் 30 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இந்த விமானம் சிற்றுண்டிச் சாலை ஒன்றின் மீது விழுந்து நொருங்கியபோது 50 அடி உயர தீச்சுவாலை எழும்பியதால் சிற்றுண்டிச்சாலையிலிருந்தவர்கள் தப்பிச் செல்ல முடியாது போய்விட்டதாக செய்திகள்தெரிவிக்கின்றன.

# எமது வாக்குகள் பெற்றே ஜனாதிபதிஉருவாகமுடியும் - செல்லச்சாமி

(நாவலப்பிட்டி)

மலைநாட்டில் எமது வாக்குப் பலத்தைப் பெற்றே இனி எந்தவொரு அரசும், எந்த ஒரு ஜனாதிபதியும் தோன்ற முடியும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

கொத்மலை பார்க் கேப்பல் உச்சிமலை கீழ்க்கணக்கு கரபந்தாட்டத் திடலில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அங்கு மேலும் உரையாற்றுகையில் இரண்டரை இலட்சம் வாக்குப்பலத்தைக் கொண்ட நாம் மலைநாட்டின் பிரதிநிதிகளாக ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களையும், மூன்று அமைச்சர்களையும் கொண்டு பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரும்பான்மைக் கட்சியாக இருக்கிறோம். புதிதாகப் பிரஜாவுரிமைபெற்று வரப்போகும் ஆறு இலட்சம் வாக்குச் சீட்டுக்களால் எதிர்காலத்தில் இருபத்தொரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சக்தியைப் பெறுவோம். இதனைக்கண்டு மனம்வெதும்புபவர்களே எமக்கு எதிராகப் பிரசாரம்செய்கின்றனர். முழு நாட்டின் அமைதிக்கும்கூட இ. தொ. காங்கிரசும், அதன் தலைவர் தொண்டமான்அவர்களுமே குரல் எழுப்பக்கூடிய நிலை இருப்பதைக்கண்டு நாம் பெருமைப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### பயிற்சி

ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH இங்கிலாந்து முறையிலான ஒருங்கமைந்த3மாத ஆங்கிலப் பயிற்சிஅளிக்கப்படுகிறதுV.N KANDASAMY A.I.B PART I (LONDON)INTER(LONDON) 87,கொக்குவில் திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அருகாமையில்) கொக்குவில் (2198)

### விற்பனைக்கு

100 க்கு மேற்பட்ட லவ் பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு ''றேடியோஸ் பதி'' 266, பருத்தித்துறை வீதி, நல்லூர் அல்லது 58, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(சி/3904)

## வலைப்பந்தாட்ட/உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்பட உள்ள உதைபந்தாட்ட/வலைப் பந்தாட்டசுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளின் விண்ணப்ப முடிவுத் திகதி:

20. 02. 1992

ரூபா 50/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். முடிவு திகதிக்குப் பிந்திய விண்ணப்பப் படிவங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் பின்வருவோரிடம் தொடர்பு கொள்ளலாம்.

திரு. சொ. விஜயராஜா,
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

திரு. றோகன் ராஜசிங்கம்,
சக்தி அகம், காங்கேசன்துறை வீதி,
மருதனாமடம்.

திரு. ந. சிறீகாந்தா,
மணற்காட்டு ஒழுங்கை, மட்டுவில் தெற்கு.

திரு. பா. கிருபாகரன்,
''அன்னை இல்லம்''.
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

திரு. த. றி. நித்திலநாயகம்,
327/9,கதிற்றல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

திரு. செ. பிறேமதாசன்,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

---

01-08-1954 திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களுக்குரிய

## பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கல்

அவசர தேவைகளின்பொருட்டு மேற்படி சான்றிதழ்கள் பெற விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பம் செய்ய விருப்புபவர்களும் மேலதிக மாவட்டப்பதிவாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு தொடர்பு கொள்பவர்களுக்கு போட்டோஸ்ரட் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கான கட்டணமாக ரூபா 11/- அறவிடப்படும்.

மேலதிக மாவட்டப் பதிவாளர்
யாழ் மாவட்டம்

(சி/3902)

---

## பாதணிக்கான மூலப்பொருள் எடுத்துவர அனுமதி

(யாழ்ப்பாணம்)

வதிரியில் உள்ள பாதணி உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான மூலப்பொருள்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்படவிருக்கிறது.

இப்பொருள்களை எடுத்துவருவதற்கு ஒழுங்குகளைச் செய்யும்படி மேற்படி தொழிலகம் நடமாடும் செயலகச் சேவையின்போது விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது பொருள்களை எடுத்துவருவதற்குக் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியிருக்கிறது. (க)

## முதலுதவி வகுப்புக்கள்

இருபாலை நட்சத்திர முதலுதவி நிலையத்தினரால் முதலுதவிவகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இருபாலை தமிழ் மாமன்றத்தில் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் இம் முதலுதவி வகுப்புக்கள் நடைபெறுகின்றன என்றும், முதலுதவிப் பயிற்சி பெற விருப்புவோர் நேரில் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

---

## 3-வது நினைவஞ்சலி



மலர்வு:
25- 08- 1912

உதிர்வு:
11- 02- 1989

திதி: 09 - 02 - 1992

### கதிரவேலு சுப்பிரமணியம்

இளைப்பாறிய மிருக வைத்தியரும், இந்திய இராணுவக்கப்டனும் (பிரித்தானியா) மேஜர் காசியின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்டேசன் றோட்,
சுன்னாகம்.

காசியர் குடும்பத்தினர்
(2191)

---

## நினைவு கூருகின்றோம்

### 1992 - 02 - 09

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவம் சுட்டதில் வீரச்சாவெய்திய

**மகேஸ்வரன்**

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதலில் காயமுற்று வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது வீரச்சாவெய்திய

**ரகு** (செல்லத்தம்பி யோகராஜா - தாண்டியடி, திருக்கோயில், அம்பாறை)

மன்னார் இலுப்பைக்கடவையில் சிறிலங்காப்படையினரின் விமானக்குண்டு வீச்சின் போது வீரச்சாவெய்திய

**தங்கேஸ்** (சாந்தன் யோசப்பிள்ளை ஜெயக்குமார் - நறுவிலிக்குளம், மன்னர்)

**விஷ்ணு** (சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - நெடுங்கண்டல், அடம்பன், மன்னார்)

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் கைதாகி ஒந்தாச்சி மடம் இராணுவ முகாமில் அடித்துக்கொல்லப்பட்ட

**2-ம் லெப். சிவம்** (அருளம்பலம் சிவஞானம்-களுதாவளை)

தம்பிலுவில். முனையூர்ப்பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**-ம் லெப். நித்தி** (ஆறுமுகம் கணேசமூர்த்தி-ஆலையடிவீதி, தம்பிலுவில்)

இதே ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட

★ **வே. சந்திரன்**

1989 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வளாகம் முன் இந்தியப்படையினர் எதிர்பாராதவிதமாக மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**கப்டன் சிவா|கடாபி** (வீரையா சிவகுமார்-முள்ளி ஒழுங்கை, அரியாலை கிழக்கு, யாழ்ப்பாணம்)

மன்னார் வங்காலைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன்

1991 ஆம் ஆண்டு குறிச்சா முனையில் சிறிலங்கா படையினர் பதுங்கிபிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**கௌசிகன்** (செல்வராசா சாந்தன்-பெரிய ஊறணி, மட்டக்களப்பு)

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**பிரதாப்** (காசி பரமசிவன் - இல, 10, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

நெடுங்கேணியில் சிறிலங்காப்படையினரின் உலங்குவானூர்தித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**அரி** (இரத்தினசபாபதி கிருபாகரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் சந்திரன் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-3903)

# புதிய உலக ஒழுங்கும் தமிழீழப் பொருளாதாரமும்

**த.அன்பானந்தன்**

## அறிமுகம்

1990 களில் உலக அரசியல், பொருளாதார சமூகத் துறைகள் பாரிய மாற்றத்தினைக் கண்டு வருகின்றன. அதேவேளையில் தமிழீழப் போராட்டமும் பரிணாம ரீதியில் பல்முனை வளர்ச்சிப் போக்குகளைக் காட்டி நிற்கின்றது. எனவே எதிர்கால நிலை, அடையாளம் குறித்தும் கல்வி, பொருளாதாரம், கலாசாரம் போன்ற துறைகளிலான தமிழீழத் தேசியப் பார்வை குறித்தும் எமது கவனத்தைத் திருப்ப வேண்டியதோர் முக்கிய காலகட்டத்தில் நம் நிற்கின்றோம். இவ்வாறான சூழலில், புதிய சர்வதேச நிலைமைகளையும் போக்குகளையும் கருத்திற் கொண்டு தமிழீழத்தின் பொருளாதார நிலைப்பாடு குறித்த சிந்தனையை வேண்டுவதும் அது குறித்த சில கேள்விகளையும் தேவைகளையும் முன்வைப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புதிய சர்வதேச ஒழுங்கு

1980 களின் இறுதியிலும் 1990 களின் தொடக்கத்திலும் உலகில் நிகழ்ந்த அரசியல் பொருளாதார மாற்றங்கள் மிக விரைவானதாயும் பலரின் கணிப்புக்களைப் பொய்ப்பிப்பதாயும் இருந்தது. இம் மாற்றப் போக்கு 1990 களில் மேலும் விரைவும் வீர்யமும் பெறும் என்பதை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன. கெடுபிடிப் போர் திடீரென ஒரு முடிவிற்கு வந்துள்ளதுடன் மேற்கு - கிழக்கு ஒத்துழைப்பு அதிகரித்து வருகின்றது. இதனால் ஏலவேயுள்ள வடக்கு - தெற்குப் பொருளாதாரச் சமமின்மை மேலும் அதிகரிக்கவும் தென் பிராந்தியங்கள் உலக பொருளாதார உந்து சக்தியால் ஒருபுறம் ஒதுக்கப்படவும் வாய்ப்புக்கள் கூடியுள்ளதால் பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங்க் போன்ற பொருளியலறிஞர்கள் கருதுகின்றனர்.

உலக வர்த்தக நிலைமை கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தெற்குக்குப் பாதகமான போக்கையே கொண்டிருந்தது. மேற்குலக நாடுகளும் - குறிப்பாக அமெரிக்காவும் - அவற்றின் பொருளாதாரக் காவல் நாய்களான சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி, தீர்வைகள் - வர்த்தகம் என்பவற்றிற்கான பொது உடன்பாட்டு அமைப்பு (GATT) என்பனவும் வர்த்தக ரீதியில் இந்தச் சமமின்மையை அதிகரிக்கவே உதவிய போதும் 'கம்யூனிஸப் பூச்சாண்டி'யின் நியாயப் படுத்தலின் அடிப்படையிலாவது தெற்குக்குச் சில கடனுதவிகளையும் வரையறுக்கப்பட்ட தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கின. ஆனால் கம்யூனிசப் பூச்சாண்டிக்குத் தற்போது அவசியமில்லையாதலால் உலக சந்தைப் பொருளாதார அமைப்பில் தெற்கு தனித்து விடப்படக்கூடிய அபாயமும் அதனூடாகப் பொருளாதாரப் பின்னடைவுகளைக் காணக்கூடிய நிலையும் தோன்றியுள்ளது. ஊழியச் சுரண்டலுக்காகப் பல்தேசியக் கம்பனிகளின் தெற்கு நோக்கிய நுழைவு தெற்கின் சில நாடுகளுக்குள் மூலதனப் பாய்ச்சலை ஏற்படுத்திய போதும், இக்கம்பனிகளின் நுழைவால் வேறு பல சிக்கல்கள் உருவாகியமை ஒருபுறமிருக்க, மேற்கு - கிழக்கு ஒத்துழைப்பு நடவடிக்கைகளால் தெற்கு நோக்கிய இம் மூலதனப் பாய்ச்சல்கள் கூடப் பாதிக்கப்படலாம். இதேவேளை உலகப் பொருளாதார முறைமையோ தகவற் பொருளாதார முறைமையூடாகப் பாரிய மாற்றங்களைக் கண்டு வருகின்றது. இதுவும் வடக்கு - தெற்கு இடைவெளியைப் பெருப்பிக்கின்றது. அத்துடன் பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங்க் கருதுவது போல பொருளியல் வல்லன்களை வென்றெடுக்க மூன்றாம் மண்டல நாடுகள் நோக்கிய வடக்கின் முதலாவது போரும் (தொடர்ச்சியான மூன்றாம் உலகப் போரின் முதல் கட்டம் என இப் பேராசிரியர் கருதுகிறார்) வளைகுடாவில் நடந்து முடிந்துள்ளது. இக் குணங்குறிகள் அனைத்தும், பொதுவாக மூன்றாம் மண்டல நாடுகள் - குறிப்பாக தென்னுலக நாடுகள் - தமது எதிர்காலம் குறித்தும் தமது பொருளாதாரக் கொள்கைகள், சர்வதேச உறவுகள் குறித்தும் பல புதிய உத்திகளைக்கையாளவேண்டிய தேவையை உணர்த்துகின்றன.

## தமிழீழ பொருளாதார நிலை

சுதந்திர இலங்கையில் பதவிக்குவந்த இலங்கைஅரசாங்கங்களால் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இவ்வரசாங்கங்களால் தொடர்ச்சியாகத் தமிழீழப்பகுதிகளின் பொருளாதாரத் தேவைகள், அபிவிருத்தி என்பன புறமொதுக்கப்பட்டதாலும் இராணுவ ஒடுக்குமுறை கண்மூடித்தனமான வான் தாக்குதல்கள் போன்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் தொடர்ச்சியான விடுதலைப்போராட்டம் காரணமாகவும் எமது பொருளாதாரத்தின் சுயமான இயங்குதளம் பலமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இன்றைய பொருளாதார நிலை இலக்கற்ற தடுமாற்றப் போக்காய் உள்ளது.

போராட்ட வளர்ச்சியினால் போராட்ட அமைப்புக்களுள் பெருமளவு இளைஞர்கள் உள்வாங்கப்பட்டமை ஒரு புறமிருக்க இலங்கை இந்திய இராணுவ அடாவடித்தனங்கள், தேச விரோதிகளின் அடாவடித்தனங்களால் பெருமளவு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் கணிசமான அளவினர் அந்நிய தேசங்களுக்கு நகர்ந்துள்ளனர் இந்நிகழ்வு எமது உயிரோட்டமுள்ள உழைப்புச் சக்தியின்ஒருபகுதியைப் பாதித்துள்ளது. எமது தேச அபிவிருத்தி நடவடிக்கையில் இறங்கும் போது இந்த உழைப்புச் சக்தியின் இழப்பு தெரியவருமெனினும் தெற்காசியப் பொதுப்பண்பான மிகைஊழிய நிலை நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்க உதவக்கூடும். இருந்தபோதும் மூளைசாலிகள் இழப்பு, வெளியேற்றம் பிரச்சினைக்குரிய தொன்றாகவே இருக்கும். இத்துடன் எமது உள்ளார்ந்த வளங்கள், ஆற்றல்களைப் பயன்படுத்த முடியாத இப்போதய சூழ்நிலையும் இவை குறித்த எதுவித திட்டங்களும் இல்லாமையும்; யுத்தம் பலதரப்பட்ட பொருளாதார முயற்சிகளை முடக்கியுள்ளமையும்; இராணுவத் தாக்குதல்கள் வான் தாக்குதல்கள் என்பன எமது தேசிய வளங்கள் சொத்துக்களில் பாதிப்பினை ஏற்படுத்தி வருவதும்; எமது கல்விநிலைமைகள் குழம்பமடைவதும்; உடனடிக் கவனிப்பிற்குரிய அம்சங்களாகும். அதுவும் உலகின் மாற்றங்களைக் கவனத்திற் கொள்கையில் நாங்கள் எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் நின்று பிடிக்கவும் எமது அடையாளத்தை உறுதிப்படுத்தவும் நாம் உடனடியாகச் செயலில் இறங்கவேண்டியது காலத்தின் கட்டாயமுமாகும்.

இந்த வகையில் பொருளாதார ரீதியில் மூன்று முக்கிய விடயங்கள் முன்னுரிமை பெறுவதாக நான் நினைக்கிறேன்.

அ. தமிழீழத்திற்கானபொருளாதார அமைப்பினையும் அதன் கொள்கையையும் நிர்ணயித்தல்.

ஆ. தீர்மானிக்கப்பட்ட அமைப்பு கொள்கைகளுடன்பெருமளவுக்குமுரண்படாதவகையில் இன்றைய போர்க்காலச் சூழலில்ஏற்படுத்தப்படவேண்டிய பொருளாதார நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடலும் தீர்மானித்தலும்.

இ. எமது பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்களைஇனங்காணவும் அபிவிருத்தி செய்யவும் திட்டமிடவும் பலதுறைகளிலும்தொடர்ச்சியான ஆய்வினை மேற்கொள்வதுடன் இவற்றின் பெறுபேறுகளுக்கமைய செயற்திட்டங்களை உருவாக்குதலும். மீளமைத்தலும்.

## தமிழீழத்திற்கான பொருளாதார அமைப்பு

தமிழீழத்திற்கான பொருளாதார அமைப்பொன்றைத் தீர்மானிப்பதற்குதவியாக உலக அனுபவத்தில் வெற்றிகரமான பொருளாதார அமைப்புக்கள்பற்றிநோக்குவது நலன் பயக்கும் முதலாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் முதலாளித்துவம், சோஷலிசம் எனும் இருபொருளாதார அமைப்புக்கள் தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. இதுவரைவேறு வகையான உயிர்ப்புள்ள பொருளாதார அமைப்புப்பற்றியசிந்தனையொன்றும் முன் வைக்கப்படவில்லை. எனின் இவற்றின் வெற்றி தோல்விகளைக் கருத்திற் கொள்ளின் 1914, 1930, 1949, 1958, 1967 ஆம் ஆண்டுகளை யொட்டி நிகழ்ந்த பொருளாதார நெருக்கடிகள் தூய முதலாளித்துவக் கோட்பாட்டை நிராகரித்தன. அண்மைய சோவியத், கிழக்கைரோப்பிய சீன அனுபவங்கள் தூயசோஷலிசக் கோட்பாட்டினையும் நிராகரிக்கின்றன.

சமூகநலப் பொருளாதாரக் கொள்கைகளிலும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சில கொள்கைகளிலும் மேற்குலக முதலாளித்துவப் பொருளாதாரம் அரசதுறைப் பங்களிப்பைக் கொண்டுள்ளன. பல சோஷலிச நாடுகள் வரையறுக்கப்பட்ட சந்தைப் பொருளாதாரத்தை அனுமதித்துள்ளன. எனவே முதலாளித்துவம், சோஷலிஸம் என்பனவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், கொள்கைகள் என்பன வெவ்வேறளவுகளில் கலக்கப்பட்டுள்ள பொருளாதார முறைமையே பொதுவாக உலகெங்கிலும் காணப்படுகின்றது எனினும் முதலாமுலக நாடுகள் எனப்படுபவை - குறிப்பாக மேற்குலகம் -பெருமளவிற்குச் சந்தைப் பொருளாதாரத்தையும்; சோஷலிஸ அல்லது இரண்டாம் உலகநாடுகள் பெருமளவிற்கு மையப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பையும் மூன்றாம் மண்டல நாடுகள் இவையிரண்டிற்கும் இடைப்பட்டதொரு கலப்புப் பொருளாதார அமைப்பையும் பின்பற்றி வந்துள்ளன.

எனின் முதலாளித்துவம் ஆரம்பத்தில் சுயசார்பு கருதுகோளிலிருந்து பாரிய கைத்தொழில் விரிவாக்கக் கொள்கைக்கு மாறித் தொடர்ந்து வர்த்தகப் பொருளாதாரக் கொள்கைக்கும் பின் இன்று தகவற் பொருளாதாரமாக வளர்ந்து வருகின்றது. எனினும் 1988, 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் பங்குச் சந்தை வீழ்ச்சி, நிதிச் சந்தைச் சரிவு போன்ற நெருக்கடிகளை இது சந்தித்து வந்ததுடன் முதலாளித்துவத் தலைமை நாடான அமெரிக்கா பாதகமான வர்த்தக நிலுவைகளையும் மிகப் பெரியளவிலான கடன்படுகையையும் கொண்டிருந்தது. தமது பொருளாதாரச் சரிவுகளைச்சமன்செய்ய 'அமெரிக்க வழமை' போலவே இம்முறையும் வளைகுடாப் போர் பயன்பட்டது. எனினும் புதிய நெருக்கடிகளுக்கான வித்துக்களைத் தன்னகத்தே கொண்டதாகவே முதலாளித்துவத் தகவற் பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது. மையப்படுத்தப்பட்ட பொதுவுடைமைப் பொருளாதாரங்கள் மூலதனமின்மை, உற்பத்தித்திறன் வீழ்ச்சி, ஊழல், பற்றாக்குறை போன்ற நெருக்கடிகளால் அண்மையில் பாரிய மாறுதல்களைத் தமது பொருளாதாரத்துள் பரீட்சிக்கின்றன.

இவையிரண்டினதும் நல்ல அம்சங்களை அமுலாக்க முனைந்த கலப்பு பொருளாதாரங்கள் மூலதன நெருக்கடி பாதக உலக வர்த்தகம், ஊழல், அரசியற் தலையீடுகள், தொழில் நுட்பவியல் ஆற்றற் குறைவு, கடன்சுமை, உள்நாட்டுக் குழப்பங்கள், தங்கியிருக்கும் தன்மை போன்ற பல நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளன. இவற்றையும் இன்றைய உலகநிலையையும் ஆய்வு செய்த பேராசிரியர் சாமிர் அமின் போன்ற பொருளியலறிஞர்கள் மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் சோஷலிஸ நாடுகளுக்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார அமைப்பொன்றைச் சிபார்சு செய்கின்றனர். விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத் திட்டம் பற்றிய வெளியீடான 'சோஷலிசத் தமிழீழம்' எனும் புத்தகத்தில் ''மத்திய அரசின் குறுகிய வட்டத்திற்குள் அல்லாது சனநாயக ரீதியில், சுயாதீனமான முறையில் தேசிய பொருளாதார திட்டம் வகுக்கப்படுவதையும் செயற்படுத்தப்படுவதையும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஊக்குவிக்கும்'' (பக்கம் 16) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது எனவே சாமிர்அமினின் மேற்படி சிபார்சு எமது தேசக் கொள்கைத் தீர்மானிப்பாளர்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றே என்பது புலனாகின்றது.

(தொடரும்)

---

## நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(குருநகர்)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாலாயிரம் ரூபா செலவில் நீர் இறைக்கும் கருவி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. (21)

## அடையாளம் காணப்பட்டார்

(குருநகர்)

கடந்த ஆறாம் திகதி இரவு வீதியில் மயங்கிக் கிடந்து யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானவரை உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

குருநகர், றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த சேவியர் தார்சீஸியஸ் (வயது 42) என்பவரே அவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரண பிரேதபரிசோதனைகள் நேற்று முன் தினம் யாழ். வைத்தியசாலையில் நடைபெற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (21)

## அமெரி. நல்லாசி வேண்டி பிக்குகள் பிரார்த்தனை

(கொழும்பு)

சிறிலங்காவுக்குப் பெருமளவில் அமெரிக்கா பொருளாதார மற்றும் வர்த்தக உதவிகளை வழங்கியிருப்பதாகக் கூறும் பௌத்த பிக்குகள், அமெரிக்காவுக்கு கடவுளின் நல்லாசிகளை வேண்டிபிரார்த்தனையை நேற்றுத் தொடங்கினர்.

இந்தப் பிரார்த்தனை தொடர்ந்து ஒரு வருட காலம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## போராளியின் உணர்வுகளை வெளிக்காட்டிய வானதி

**— அரசண்ணா**

(வடமராட்சி கிழக்கு)

''வானதியின் கவிதைகள் மூலம் ஒரு விடுதலைப் போராளியின் உள்ளத்து உணர்வுகள் வெளிக்காட்டப் பட்டுள்ளன''

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா ''வானதியின் கவிதைகள்'' நூல் அறிமுக விழாவில் கலந்து உரையாற்றும்போது. இவ்வாறு கூறினார்.

கடந்த திங்கட்கிழமை (03. 02. 92) மாலை 4 மணியளவில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திரு. அரசண்ணா தொடர்ந்து உரையாற்றும் போது,

''வானதிஇக்கவிதைகள் மூலம், தனது வாழ்வு வரலாற்றைக் கூட எழுதுவதற்கான, குறிப்புக்களை. தரவுகளைத் தந்திருக்கின்றார். இந்நூலில் உள்ள 15 கவிதைகளும் பல்வேறு விடயங்களை எடுத்துக்கூறி நிற்கின்றது

''நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு'' என கற்பக தருவென அழைக்கப்படும் பனையை நோக்கி விழித்திருக்கும் கவிதை, தமிழீழத்தில் நிலைக்கக் கூடியதும், அதன் பொருளாதாரத்திற்கு உதவக் கூடியதும் பனைமரம் தான் என்பதை எடுத்துரைத்து நிற்கின்றது'' என்றார்.

இந்நிகழ்ச்சியில் வடமராட்சி கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு.பாஸ்கரன், தேசிய ஆசிரிய ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. ந. அனந்தராஜ், திரு அரியகுமார் உட்பட பலர்உரையாற்றினார்கள். (36)

# பதற்றத்தைத் தணிக்க ஐ.நா. உதவி கோரவில்லை

## இந்தியா திட்டவட்டமாக அறிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தானுடன் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தை தணிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தலையீட்டை கோரப் போவதில்லை என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகள் சிம்லா உடன்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படல் வேண்டும் என்ற இந்திய நிலையில் மாற்றம் எதுவுமில்லை என்று தெரிவித்த வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், வெளியுறவு செயலாளர் ஜே. என். டிக்ஷித் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் தூதுவர்களை புதுடில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியது ஐ. நா. பாதுகாப்பு சபையின் தலையீட்டைக் கோருவதற்காக அல்ல என்பதையும் தெளிவு படுத்தினார்.

அத்துடன் பாகிஸ்தான் ஆளுகையிலுள்ள காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் இழைத்த தவறுகள், மற்றும் இந்திய உள் விவகாரங்களில் பாகிஸ்தானின் அநாவசியத் தலையீடு போன்றவற்றை விளக்குவதற்காகவே தூதுவர்களை வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஷித் சந்தித்துப் பேசியதாக அவ்வதிகாரி தெரிவித்தார்

## 'பயங்கரவாதிகளுக்கு' உதவுவதை பாக். நிறுத்தவேண்டும்

### -பிரிட்டன் கோரிக்கை

(லண்டன்)

பஞ்சாப் மற்றும் ஜம்முகாஷ்மீரில் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்துமாறு இங்கிலாந்து பாகிஸ்தானைக் கேட்டுள்ளது.

கமன்ஸ் சபையில் பேசிய இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் டக்லர் ஹோர்ட் பாகிஸ்தான் அதன் எல்லைகளுக்கு அப்பால் வன்செயல்களைக் கொண்டுசெல்வது நியாயமற்றதும் விவேகமற்றதுமான செயல் என எச்சரித்துள்ளார்.

## ஆந்திராவில் கண்ணிவெடி; ஆறு பொலிசார் பலி

(டில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் 3 சி ஆர்.பி.எவ். படையினரும், மூன்று பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் போராட்டக் குழு எனப்படும் நக்சலைட் தீவிரவாதிகளே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசம் நிசாமாபாத் மாவட்டத்திலுள்ள காமாரட்டி நகருக்குசமீபமாக மகாரெட்டி கிராமத்தில் நேற்று முன்தினம்நடைபெற்ற இச் சம்பவம் பற்றி மேலதிக விபரங்கள் தெரியவில்லை.

### இஸ்ரேலுடனான உறவில்

## அரபுக்களின் லட்சியத்திற்கு இந்திய ஆதரவு குறையாது

(டில்லி)

இஸ்ரேலுடன் ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் அரபுக்களின் இலட்சியத்திற்கு இந்தியா அளித்துவரும் ஆதரவு எந்தவகையிலும் குறைந்துவிடாது என அரபு லீக் நம்பிக்கை கொண்டுள்ளது. புதுடில்லிக்கு வந்துள்ள அரபு லீகின் தலைமைச் செயலாளர் டாக்டர் இஸ்மத் அப்துல் மக்குயிட்டைக் கௌரவிக்க ராஜீய சபைத் தலைவர் நயீமா ஹப்துல்லா அளித்த விருந்துபசாரத்தின் போது இது வெளியிடப்பட்டது.

இதில் கலந்துகொண்ட பல அரபு நாட்டுத் தூதுவர்களும், இந்தியா ஆட்சியுரிமை பெற்ற ஒரு நாடு அது தனது நலன்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு அதற்கு உரிமை உண்டு என்ற கருத்தையே பிரதிபலித்தனர்.

இதனிடையே இந்தியா, இஸ்ரேலுடன் ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதை அமெரிக்கா வரவேற்பதாக அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஸ்டிபன் சொலார்ஸ் கூறியுள்ளார்.

## தி. மு. க. பேரணிகளுக்கான தடையை வாபஸ் பெறுக

### மக்கள் கட்சி கோரிக்கை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகம் பேரணிகளை நடத்த ஜெயலலிதா அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகள் திரும்ப பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் கேட்டுக்கொண்டு உள்ளார். பேரணிக்கு முன்னதாக ஆர்ப்பாட்டங்களில் தொண்டர்கள் இறங்கமாட்டார்கள் என்று எழுத்து மூலமாக தரப்படவேண்டும் என்ற நிபந்தனையைச் சுட்டிக்காட்டிய அவர் இது போன்ற நிபந்தனை ஏனைய கட்சிகள் மீதும் விதிக்கப்படலாம் என்றும் எச்சரித்தார்.

## கண்ணீர் அஞ்சலி

### பண்டிதர் வே. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழ் ஆசான் பண்டிதர் வே சண்முகலிங்கம் அவர்கள் காலமானார் என்பதை அறியத் தருகின்றோம். அன்னாரின் மறைவையொட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது

இறுதிக் கிரியைகள் 9-2-92 இன்று ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் இணுவிலிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். ஆசிரியர்களும் மாணவர்களும் காலை 11 மணியளவில் அங்கு கூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம். 9-2-92

அதிபர்
[சி/3905]

## உஸ்பெஸ்கிஸ்தான் இந்தியா வர்த்தக உறவு

(கொச்சி)

உஸ்பெஸ்கிஸ்தானுடன் ஏழரைக்கோடி டாலர் பெறுமதியான வர்த்தக உடன்படிக்கையொன்றை இந்தியா செய்துகொண்டுள்ளது என்று இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கொச்சியில்செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் உக்ரையினுடனும் இது போன்ற உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## இந்திய புலனாய்வுக்குழு ஒரு வாரம் தங்கும்

(கொழும்பு)

தற்போது சிறிலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளை விசாரிக்க வந்திருக்கும் இந்திய அதிகாரிகள் குழு ஒரு வார காலம் கொழும்பில் தங்கியிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழனன்று கொழும்பு வந்த இவர்கள், இலங்கையின் துப்பறியும் பிரிவினருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர் எனவும், ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளிடம் விசாரிப்பர் எனவும் விசாரணைக்குழு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## 825 மில். டாலர் உதவி சிறிலங்காவிற்கு கிடைத்தது

(கொழும்பு)

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுக் கூட்டத்தில் சிறிலங்காவிற்கு எண்ணூற்று இருபத்தைந்து கோடி டாலர்கள் வரும் நிதி ஆண்டிற்கு ஒதுக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இது சிறிலங்காத் தூதுக்குழு கோரிய தொகையை விட இருபத்தைந்துகோடி டாலர்கள் அதிகமானதாகும். இந்தத் தகவல்களை தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற டி.பி. விஜயதுங்கா நேற்று முன்தினமிரவு ஜனாதிபதிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

### இரணவில ஐந்து நட்சத்திர

## ஹோட்டல்கட்டும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்திலுள்ள இரணவில எனுமிடத்தில் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றைக் கட்டும் திட்டத்தை உல்லாசப் பயணக் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைவிட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மீனவர்களினதும், கத்தோலிக்க பீடத்தினரதும் பலத்த எதிர்ப்புக் காரணமாக ஐந்து நட்சத்திர உல்லாச விடுதி மற்றும் விளையாட்டரங்கு என்பன நிறுவும் திட்டத்தை அமைச்சு கைவிட்டுள்ளது. இதே இடத்தில் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின்' அஞ்சல் நிலையம் அமைக்கப்படுவதற்கும் அவ்வூர் வாசிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை தெரிந்ததே.

## வேலைநாளை அதிகரிக்க தொழிலாளர் வற்புறுத்து

ஊவா மாகாணத்தில் தோட்டத் தொழிலாளருக்கு வேலை குறைக்கப்பட்டதனை அடுத்து தமக்கு கிழமையில் ஆறுநாட்கள் வேலை பெற்றுத் தரவேண்டும் என கோரி தொழிலாளர்கள் தொழிற்சங்க காரியாலயங்களுக்கு தினமும் படையெடுத்தவண்ணமுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் இருந்து தமக்கு வழங்கப்படுவதாக கூறப்பட்ட 100 ரூபா சம்பள உயர்வை தமக்கு முழுமையாக கிடைக்காமல் இருக்கச் செய்வதற்காகவே தோட்ட நிர்வாகங்கள் திட்டமிட்டு இவ் வேலை நாள் குறைப்பைச் செய்வதாகவும் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

## பண்பாட்டுக்கழகஏற்பாட்டில் நெல்லியடியில்கலைநிகழ்வு

(மாங்குளம்)

எதிர்வரும் 15 ஆம் திகதி நெல்லியடி மகாத்மா திரை அரங்கில் யாழ் மாவட்டகலை பண்பாட்டுக் கழகத்தினரால் இரவு 7 30 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன

இக் கலை நிகழ்ச்சியில் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும்மக்களின் அபிமானத்தைப் பெற்ற வடமராட்சி கலை பண்பாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன்செவ்வானம் இசைக் குழுவின் இசைநிகழ்ச்சியும் சுதந்திரப் போர் வெல்லும் நாடகமும் இடம்பெறும்.

செவ்வானம் இசைக்குழுவின் எழுச்சிப் பாடல்கள் நிகழ்ச்சியில் இந்தமண் எங்களின் சொந்த மண் ஒலிப்பதிவு நாடாவில் செவ்வானம் சிவப்பது ஏன் என்ற பாடலை இசைத்த ஜெயக்குமார் ஜெய பாரதி, மதி, நவநீதன் ஜென்சி ஆகியோர் பாடல்களை பாடுகின்றனர். இசைக்கப்படும் பாடல்கள் சில செவ்வானம் இசைக்குழுவின் இசையமைப்பில் உருவானவை குறிப்பிடத்தக்கது. (82)

### வடமராட்சியில்

## மணலாறு நூலின் அறிமுக விழா

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் கரவெட்டி, பருத்தித்துறை வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இம்மாதம் 13 ஆம், 14ஆம் 15ஆம் திகதிகளில் ''மணலாறு'' நூல் அறிமுகவிழா நடைபெறவுள்ளது. இந்நூல் அறிமுகவிழாக்கள் அவ்வப் பகுதி சனசமூக நிலையங்களின் அனுசரணைகளுடன் நடைபெறுகின்றன.

கரவெட்டியில் 13 ஆம் திகதி பி. ப. 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், பருத்தித்துறையில்14ஆம் திகதி பி. ப. 4 மணிக்கு புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், வல்வெட்டித்துறையில் 15 ஆம் திகதி பி.ப. 4மணிக்கு வல்வை மகளிர் கல்லூரியிலும் யாழ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் இந்நூல் அறிமுகவிழா நடைபெறும்.

கவிஞர். துரை சத்திய சீலன், தேசிய ஆசிரியர் ஒன்றிய யாழ். மாவட்டச் செயலாளர் திரு. ந. ஆனந்தராஜ் வடமராட்சி வடக்கு ஆய்வுப் பிரிவு பொறுப்பாளர் திரு. எஸ். வீரகுலசிங்கம், தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் ஆகியோர் நூல் அறிமுக உரையை நிகழ்த்துவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### பருத்தித்துறை மெதடிஸ்த

## பெண்கள் கல்லூரிக்கு தங்கப் பதக்கம்

(பருத்தித்துறை)

இலங்கைசைவமன்றம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய சமயப் போட்டியில் முதலாவது பரிசான தங்கப் பதக்கத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி பெற்றுக் கொண்டது இலங்கைச் சைவ மன்றத்தின் இப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது விழாவிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் பாரியார் திருமதி இராஜேஸ்வரி துரைராசா பரிசில்களை வழங்கினார். (25)

## புதிய கட்டட திறப்பு விழா

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழா நாளை பத்தாம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்தவிழாவில் கல்விப்பகுதி உத்தியோகஸ்தர்களும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

### சிந்தனைக்கு

நிமிர்ந்து நிற்பதாய் எண்ணுபவன் எச்சரிக்கையாய் இருக்கட்டும்; அவன் விழுந்து விடாமல் இருக்கும் பொருட்டு.

- புனிதர் பவுல்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 09-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# ஈராக் போன்று பாக்.கும் சந்தர்ப்பம் வழங்குமா?

காஷ்மீர் விவகாரத்தால் இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பெரும் பதற்ற நிலை உருவாகியிருப்பதாகவும், பெரும் போர் ஒன்று மூண்டுவிடக் கூடிய அபாயம் உருவாகி வருவதாகவும், செய்தியாளர்கள் தெரிவிக்கின்றார்கள். ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி தொண்டர்கள் 50,000 பேர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீர்ப் பகுதியில் இருந்து எல்லையைக் கடந்து இந்தியாவிற்குள் புகப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே இப்பதற்றம் உருவாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தானும் இந்தியாவும் எல்லை ஓரத்தில் படைகளைக் குவித்து வருகின்றன. இரு தரப்பிலும் தலா மூன்றரை லட்சம் படை வீரர்களும், போர்த்தளபாடங்களும் குவிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒன்றை ஒன்று எச்சரிக்கவும் தொடங்கியுள்ளன. இந்தியா முந்திக் கொண்டு சர்வதேச ஆதரவைத் திரட்டுவதிலும் இறங்கியுள்ளது.

இந் நிலையில் பாகிஸ்தானே முக்கிய தீர்மானம் எடுக்க வேண்டிய நாடாக இருக்கின்றது. ஏனெனில் பாகிஸ்தான் கட்டுப் பாட்டிலுள்ள பகுதியில் இருந்தே ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணித் தொண்டர்கள் இந்தியாவிற்குள் புக முயற்சிக்கின்றார்கள். இதில் பாகிஸ்தான் எடுக்கும் தீர்மானமே போரைத் தவிர்ப்பது மட்டுமல்ல, தென்னாசியாவின் அரசியல் போக்கையும், பாகிஸ்தானின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதாகவும் இருக்கும்.

பாகிஸ்தான் அணு குண்டு ஒன்றைத் தாம் கொண்டிருப்பதாக உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கும் நேரம் இதுவாகும். இவ் அணுகுண்டு உற்பத்தி விவகாரத்தால் அமெரிக்க - பாகிஸ்தான் உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியை உடன் நிறுத்த வேண்டும், அவற்றிற்குரிய மூலப் பொருள்களையும், தளபாடங்களையும் அழித்துவிட வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்திவருவதோடு, பாகிஸ்தானுக்கான புதிய இராணுவத் தளபாட விநியோகத்தையும் நிறுத்தியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் காஷ்மீர் விவகாரத்தை ஓர் போர் சூழ்நிலைக்கு இட்டுச் செல்லுமேயானால் அது பாகிஸ்தானுக்குப் பெரும் கேடாகவே அமைந்து விடக்கூடும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் எழுச்சிக்கு அஞ்சி நடுங்கும் அமெரிக்காவும், மேற்குலகமும் அரபுலகில் அணுவாயுத நாடு ஒன்று இருப்பதை அனுமதிக்கப்போவதில்லை. இதனை அவர்கள் வெளிப்படையாகவே எதிர்த்து வருகின்றார்கள். இந் நிலையில் அணுவாயுத சக்தி பெற்ற பாகிஸ்தானை அவர்கள் அனுமதிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

இதேவேளை 1982 லும், 1991லும் ஈராக்கிற்கு நடந்ததை பாகிஸ்தான் மறந்து விடக்கூடாது. 1982ல் ஈராக் அணுவாயுத வல்லமை பெற்று விடும் என்ற அச்சத்தில் அமெரிக்காவின் அனுமதியுடன் இஸ்ரேல் ஈராக்கிய அணு உலையைத் தாக்கி அழித்தது. இதே போன்று 1991ல் குவைத் ஆக்கிரமிப்பை சாட்டாக வைத்து ஈராக்கின் அணு ஆற்றலை அமெரிக்கா அழித்து விட்டது.

மேலும் சர்வதேச அரசியல் ஒழுங்கு மாறிவரும் நிலையில் பாகிஸ்தான் ஓர் போரை ஆரம்பிக்குமானால் அது பாகிஸ்தானுக்கு ஆபத்தாகவே முடியும் இந்தியா ஊடாக பாகிஸ்தானின் அணு ஆயுத வல்லமையை அழிக்க மேற்கு நாடுகள் பெரும்பாலும் முயற்சிக்கக் கூடும். அதற்கு ஏற்றாற் போல் இந்திய மேற்கத்தைய உறவு தற்பொழுது நெருக்கமானதாக மாறியும் வருகின்றது.

அத்தோடு பாகிஸ்தானின் அணுஆயுத சக்தியை எவ்வழியிலேனும் அழிப்பதற்கு மேற்குலகம் முயற்சிக்குமானால் அதற்கு உலகின் எந்தப் பகுதியிலும் இருந்து பாகிஸ்தானுக்கு ஆதரவு கிட்டும் என்று சொல்வதற்கில்லை. 1972 ஆம் ஆண்டு இந்தியாவுடன் பாகிஸ்தான் போரிட்ட போது அமெரிக்காவின் பின்னணி ஆயுத பலமும், சவூதி அரேபியாவின் பணபலமும் பாகிஸ்தானுக்கு இருந்தன. ஆனால். இன்றைய சூழ் நிலை முற்றிலும் மாறானது. ஈராக்கின் நிலை அதற்கொருபாடமாகும்.

இந்நிலையில் ஈராக் விட்ட பிழை போன்று பாகிஸ்தானும் விடுமானால், அது இந்தியாவிற்கும், உலகைத் தனது பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முற்பட்டுள்ள அமெரிக்காவிற்கும் வழங்கிய சந்தர்ப்பமாகவே இது முடியும்.

இந்திய உள்விவகாரத்தில் தலையிடுதல்;

# நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும்; பாக்.எதிர்க்கட்சிஅரசிற்குஎச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவின் உள்விவகாரங்களில் அநாவசியமாகத் தலையிடுவது ஆபத்தான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று பாகிஸ்தானின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் கான் அப்துல் லாவலி கான் பாகிஸ்தான் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். பாகிஸ்தானில் வெளிவரும் ''புறன்டியர் போஸ்ட்'' என்னும் சஞ்சிகைக்குப் பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் சிம்லா உடன்பாடு இருநாட்டுப் பாராளுமன்றங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது எனவும், அதன் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், கூறியதுடன், பாகிஸ்தான் அரசு ஆப்கானிஸ்தானில் பதின்மூன்று ஆண்டுகள் செய்தது போன்றஆபத்தான விளையாட்டை நடாத்துவதாகவும் தெரிவித்தார்.

## எல்லையைத் தாண்டாது பார்த்துக் கொள்ளவும்

### ஐரோப்பிய சமூகம் கோரிக்கை

(டில்லி)

பாகிஸ்தானிலிருந்து ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் எதிர்வரும் செவ்வாயன்று எல்லைக் கோட்டைத் தாண்டவிடாது பார்த்துக் கொள்ளுமாறு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் பாகிஸ்தானிடம் கோரியுள்ளன இத்தகைய செயல்களை தடுக்குமாறு கோரும் மகஜரொன்றை ஐரோப்பிய சமூக நாடுகள் பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்துள்ளன.

இதேவேளை இம் மகஜரின் நகல் பிரதி ஒன்று போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளின் புதுடில்லியிலுள்ள தூதுவர்கள், இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெலய்ரோவிடமும் கையளிக்கப்பட்டது.

## பாக். மிரட்டலை சமாளிக்க இந்தியா தயாராயுள்ளது

### - மாதவசிங் சோலங்கி

(டில்லி)

பாகிஸ்தானின் அணுகுண்டு மிரட்டல் எதையும் சமாளிப்பதற்கு இந்தியா தயார்நிலையில் இருப்பதாக வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி தெரிவித்தார்.

நேற்றுப் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தானுக்கு அணுவாயுதம் செய்யும் ஆற்றல் உண்டு என பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் செறிாகான் வாஷிங்டனில் கூறியிருப்பது இந்தியாவிற்கு வியப்பளிக்கவில்லை என்றார்.

இந்தியா பாதுகாப்பில் மிகுந்த கரிசனை கொண்டிருக்கிறது என்று கூறிய மாதவசிங், நிலைமையைச் சமாளிப்பதற்கு எங்கள் பாதுகாப்பு ஆயத்த நிலை எந்த வகையிலும் சளைத்துவிடாது என்றார்.

காஷ்மீர் எல்லைக் கோட்டை தாண்டுமாறு ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர்கள் அழைப்பு விடுத்திருப்பதைப் பற்றிக் கூறிய மாதவசிங் இதை உறுதியாக ஒடுக்கி வன்மையான பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

பாக். கிடம் அணுகுண்டு

## உரிய நடவடிக்கை இந்தியா எடுக்கவேண்டும்

(டில்லி)

பாகிஸ்தானால் அணுகுண்டு ஒன்றைத் தயாரிக்க முடியும் என்று அந்த நாட்டின் வெளியுறவுச் செயலர் செறியாகன் கூறியிருப்பதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திரா காங்கிரஸ் கட்சி அரசைக் கேட்டுள்ளது.

நேற்றுப் புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசிய இந்திரா காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகப் பிரகடனப் படுத்தப் படாத போர் ஒன்றைத் தொடுத்திருக்கிறது என்றார்.

பாகிஸ்தானுக்கு உதவும் நாடுகள் அந்த நாட்டுக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் வற்புறுத்தினார்.

## ரயில் குண்டுவெடிப்பு; 3 பேர் பலி; 10 பேர் காயம்

(டில்லி)

பெரோஸ்பூர்-டெல்கி எக்ஸ்பிரஸ் ரயில்வண்டியில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் மூவர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். உத்தியோக பூர்வ வட்டாரங்களின் தகவல்களின்படி ரயில்பெட்டி ஒன்று முற்றாகச் சேதமாகியுள்ளது. பொலிஸாரும், ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரும் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்துள்ளனர். மேலதிக விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை

## அமெ.இஸ்ரேல்பேச்சுமுறிவு கடனுதவி இடைநிறுத்தம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளன. இதனால் இஸ்ரேலுக்கு பத்தாயிரம் மில்லியன் டாலர்கள் நீண்டகாலக் கடனுதவியாக வழங்க முன்வந்த அமெரிக்காவின் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதர்களைக் குடியேற்றும் விவகாரம் தொடர்பாக இசுரேலுக்கும், அமெரிக்காவிற்கும் இடையே கருத்துவேறுபாடுகள் தோன்றியிருப்பது தெரிந்ததே,

## டயானாவின்பென்ஸ்காரால் பிரிட்டனில் சர்ச்சை

(லண்டன்)

முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸின் மனைவி இளவரசி டயானா 1,30,000 டொலர் (ரூபா 55இலட்சத்துக்கு மேல், பெறுமதியான புதிய வெளிநாட்டு பென்ஸ் ''ஸ்போர்ட்ஸ் கார்''ஒன்றைவாங்கியுள்ளதையிட்டு பிரிட்டனில் பெரும்சர்ச்சையேகிளம்பியுள்ளது.

இவர் இக்காரை வாங்கியது நாட்டுப் பற்றுக்கு மாறான செயல் என பாராளுமன்ற அங்கத்தவர்களும், தொழிற்சங்க தலைவர்களும்பத்திரிகைகளும் அவர் மீது கண்டனக் கணை தொடுத்துள்ளன.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிநாட்டுகார் ஒன்றைப் பாவிப்பது இதுவே முதல் தடவை எனவும் டயானா இக் காரை கொள்வனவு செய்தன் மூலம் அதை உற்பத்திசெய்த பென்ஸ் நிறுவனத்துக்குப்பெரும் விளம்பரமாகவும் அமைந்து விட்டதாகவும் அறிய வருகின்றது

மேலும் மகாராணி எலிஸபெத் சிம்மாசனம் ஏறிய 40வது ஆண்டு தினம் கொண்டாட உள்ள இத்தருணத்தில் இக்கார் வாங்க அனுமதித்தது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மகாராணி வரி செலுத்துவதில்லை என்பதுடன் மக்களின் வரிப்பணத்திலேயே அரச குடும்பம் வாழ்க்கை நடாத்துகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:

கடந்தஇரண்டுஆண்டுகளாக இத்தகைய காரைவாங்க அவர் தனது கணவரை வற்புறுத்திவந்ததாகவும் பத்திரிகைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

### நிர்வாகசேவை

ராயினும் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற பரீட்சையில் எவரும் இடம்பெறவில்லை.

இந்த விடயம் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவுக்கு இனவிகிதாசாரம் பேணபபடாமல் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் வடக்கு - கிழக்குப் பரீட்சார்த்திகள் புறக்கணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரை அடுத்து சிறுபான்மையினருக்கு உரிய நடவடிக்கை எடுத்து வாய்ப்பளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாய் பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவிக்கையில் சிறுபான்மையினரின் பட்டியல் தமக்குத் தரப்பட வில்லையெனவும் தந்திருந்தால் அவர்களையும் தெரிவு செய்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்,

### வர்த்தகர்

டையைக் காட்டி நலக்கா டி சில்வா என்ற வர்த்தகரைப் பலாத்காரமாகவானில்கடத்த முயற்சித்தார். உதவிகோரி வர்த்தகர் கூக்குரலிட அங்கு கூடிய மக்கள் கப்டனையும், கோஷ்டியைச் சேர்ந்த நான்கு பேரையும் மடக்கிப் பிடித்து அறையொன்றில் பூட்டிவைத்துப் பிற்பாடு பொலிசாரிடம் ஒப்படைத்தனர். இராணுவக் கப்டன் இராணுவப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 'ஹெல உறுமய' செயற்பட சு. கட்சி மத்திய குழு தடை

(கொழும்பு)

''ஹெல உறுமய'' என்ற பெயரில் அண்மையில் சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆரம்பிக்கப்பட்ட குழு செயற்படுவதற்குச் சுதந்திரக்கட்சியின் மத்திய குழு தடை விதித்திருப்பதாகத் தெரியவருகின்றது. சிங்கள தேசியப்பாரம்பரியத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகளுக்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்து இக்குழுவினர் தீவிர இனவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம்சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு கூட்டம் கட்சி தலைமைக் காரியாலயம் ''டாலி'' வீதியில் நடைபெற்றது

இதற்கு மத்திய குழு உறுப்பினர் கணிசமானவர்கள் கலந்து கொண்டனர். பல விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்ட போதும் அவை ஒன்றும் வெளியிடப்படவில்லை. ஆனால் முக்கியமான விடயமாக தமது பண்டாரகம பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரட்ண தலைமை வகிக்கும் ''ஹெல உறுமய'' இயக்கத்தை விட்டு அவர் வெளியேற வேண்டும் என்றும்,

அவர் அப்படி வெளியேறாவிட்டால் திலக் கருணாரட்ண தமது கட்சி அங்கத்துவத்தை இழக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஹெல உறுமய (தேசப் பாரம்பரியம்) என்னும் குழுவில் தான் இணைந்து கொள்ளவில்லை என்று அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியும், மனித உரிமைமீறல் விவகாரங்களில் அக்கறைகொண்டவருமான மகிந்த ராஜபக்ஷா கூறியுள்ளார்.

## கிராமிய அபி. திணைக்கள தையல் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

நல்லூர் அரசடிச் சந்தியில் உள்ள புடவைக்கைத்தொழில் திணைக்களத்தின் நெசவுப் பாடசாலையில் மேற்படி பயிற்சி நிலையம் நாளை திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட இருககிறது. (க)

### பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்

## 10 இல் தொண்டர் ஆசிரியர் செயலமர்வு இடம்பெறும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் பத்தாம் பதினோராம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் 2 30 மணிவரை கொத்தணிக்குழு அடிப்படையில் நடைபெறவுள்ளது.

இதன்படி பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுளிபுரம், காரைநகர் கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும் அம்பனை, அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, இளவாலைக் கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு மகாஜனாக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட சகல ஆசிரியர்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு அனுப்பி வைக்கும்படி பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. மகேசவேல் கேட்டுள்ளார்.

### வரணி வைத்தியசாலையில்

## மருந்து தட்டுப்பாடு நோயாளர்கள் பெரும்அவதி

வரணி அரசினர் வைத்தியசாலையில்மருந்துவகைகளுக்கு பலத்ததட்டுப்பாடு ஏறபட்டுள்ளமையினால் நோயாளர்கள் பலத்த இன்னல்களையும் ஏமாற்றங்களையும் அனுபவித்து வருவதாக புகார் செய்துள்ளனர்.

இவ் வைத்தியசாலைக்கு நாள்தோறும் சுமார் 200க்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்ற போதும் வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாட்டால் ஏமாற்றத்துடன் திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலைக்கு மருந்துகளை அனுப்பி வைக்குமாறு நோயாளர்கள் யாழ். சுகாதாரசேவை அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)


## இதய அஞ்சலி

### அமரர்

### பண்டிதர் வே. சண்முகலிங்கம்

தமிழர்களின் தலைநிமிர் கழகம் யாழ் இந்துக் கல்லூரி நாவலர் கண்ட கனவை 100 வருடங்களாக நனவாக்கிக் கொண்டிருக்கும் கலையகம் இது. கனவு நனவாக அரும்பாடு பட்டவர்களின் முதல் வரிசையில் வைத்துக் கணிக்கப்படக்கூடியவர்களில் ஒருவர் எங்கள் ஆசான் அமரர் பண்டிசர் வே. சண்முகலிங்கம் அவர்கள். சைவமும்தமிழும் ஒலிக்கவும் ஒளிபெறவும் செய்யும்இந்து இளைஞர் கழகம், தமிழ் மன்றம் - இவற்றின் தலைவராக, பொருளாளராக இருந்து அவர் புரிந்த பணிகள் மெச்சத்தக்கவை. போற்றத்தக்கவை. பிரார்த்தனை மண்டபத்தை அவர் சிறப்பித்த காட்சி இன்றும் என்றும் எம்மனக்கண் முன்னே பிரகாசித்துக் கொண்டிருக்கும். அன்னாரின் மறைவு யாழ். இந்துவுக்கு குறிப்பாக தமிழ், சைவத் துறைகளுக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பணிகளை தொடர்வதன் மூலம் அவரின் ஆத்ம சாந்திக்கு வழி வகுட்போமாக.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
தலைவர்,
இந்துக்கல்லூரி பழைய மாணவர்
சங்கம். 8 - 2 - 92

யாழ். இந்து
பழைய மாணவர்
சங்கம்
[சி/3906]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### புலிகள்

பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள் என அறிய முடிகின்றது.

இக்குழுவினர் சில நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்கள் எனவும் தெரியவருகிறது.

### புலிகள் படை

இடத்தில் இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத் தாக்குதலில் பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் மோதலில் மூன்று புலிகள் வீரச்சாவடைந்தனர்.

### புலிபாய்ந்தகல்லில் 8 படை பலி

மேலும் புலிபாய்ந்தகல் என்னும் இடத்தில் சிறிலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 8 இராணுவத்தினர் பலியாகினர். இந்த தகவலை கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஐந்து முனைகளில் இராணுவ நடவடிக்கை

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஐந்து வெவ்வேறு முனைகளில் சிறிலங்கா இராணுவத்தின் பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையலுவலக பேச்சாளர் லெப்டினன் கேணல் சந்திரசிறி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக தாக்குதல் குறித்து மேலதிக விபரங்கள் எதையும் வெளியிட மறுத்துவிட்டார்.

இந்த நடவடிக்கைகளில் ஐந்து இராணுவ படைப் பிரிவுகள் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக புலிகளுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கையின் ஒருபகுதியே இது என்றும் இந்த நடவடிக்கை வடபகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ள இருக்கும் தாக்குதல்களை எதுவிதத்திலும் தாமதப்படுத்தாது என்றும் தெரிவித்தார்.

## செயற்கை சினைப்படுத்தும் நிலையம் பொலிகண்டியில் திறப்பு

(பருத்தித்துறை)

தமிழீழ ஆய்வு நிறுவன பொலிகண்டி பிரதேச செயலகத்தில் செயற்கை முறைச் சினைப்படுத்தும் உப நிலையமும்கிராமிய கால்நடைச் சிகிச்சைஉபநிலையமும்எதிர்வரும் 11 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் த. அரசரத்தினம் இந்த உப நிலையங்களைத் திறந்து வைக்கின்றார், (25)

## நிபந்தனையுடன் கூடிய நிதி உதவி கிடைத்தது

(லண்டன்)

சர்வதேச மன்னிப்புச் சபையின் பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் குழு ஆலோசனை தெரிவித்துள்ளது.

அரசு சார்பற்ற மனிதநேய ஸ்தாபனங்களில் முன்னேற்றப் பணி தடங்கலில்லாமல் நடக்க வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் கருதுகின்றன.

மேலும் ஐ. நா. அமைப்பில் சிறிலங்கா மனித உரிமைமீறல் அறிக்கையின்படி 1983 இல் இருந்து இன்று வரை சிறிலங்கா அரச படைகளால் சுமார் 1200 க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவில் காணாமல் போனவர்களின் தொகை கவலைக்கிடமாகவுள்ளதால் இதைப் பற்றி சமீபத்தில் நடைபெறவிருக்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆண்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது-

அத்துடன் சிறிலங்காவில் வடக்குக் - கிழக்குப் பகுதியில் இப்போது நடந்துகொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு வழங்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்துள்ளது.

## கொழும்பு நோயாளர் பதிவு செய்து கொள்ளவும்

(கொழும்புத்துறை)

கொழும்பில் வைத்திய சிகிச்சை பெறக் கப்பலில் கொழும்பு செல்வதற்கு வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் இம் மாதம் 10ஆம் திகதி திங்கள் 11ஆம் திகதி செவ்வாய் ஆகிய தினங்களில் காலை 8-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை யாழ். போதனா வைத்திய சாலையில் சமுகம்அளித்து தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி. நவமலர் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களோ அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களோ தகுந்த ஆவணங்களுடன் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## மோட்டார் விபத்தில் ஒருவர் பலி; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் முத்திரைச் சந்தைப்பகுதியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானார். மூவர் காயமடைந்தனர்.

நேற்று மாலை மூன்று மணியளவில் முத்திரைச்சந்தைப்பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியது அவற்றில் பயணம்செய்த சிவகுமார் (வயது 23) அனுஷா ஜோர்ஜ் (வயது36) அரியாலை) ரஜேந்திரன் (வயது 30 தர்மபுரம், கேதீஸ்வரன் (வயது 12, வட்டுக்கோட்டை) ஆகியோர் படுகாயமடைந்து மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் இவர்களில் கேதீஸ்வரன் என்ற சிறுவன் நேற்று இரவு அங்கு மரணமானார்.

### இந்திய

படி சென்னை நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்தது தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்திய அரசு இழைத்த தீங்கியல் குற்றவியல் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்வதுபற்றி அரசியல் சாசன வழக்கறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தாம் இன்றும் ஆர்வமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். ஆனால் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவிடாமல் தடுக்க இந்தியா வேண்டும் என்றே தடைசெய்துவருகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சிறிலங்கா அரசோடு பேச்சுவார்த்தை நடாத்த இன்னமும் விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவிடாமல் இந்தியா வேண்டுமென்றே தடுக்கிறது என திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகள் மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகள் போன்ற மூன்றாம் தரப்பு சிறிலங்கா அரசுக்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையில் சமாதானம் செய்துவைக்கத் தாங்கள் தயார் என்று குறிப்பிட்டும்கூட இந்திய அரசு இது அனாவசியமான அத்துமீறிய தலையீடு என அதனை தடைசெய்துவருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

### நூலகம் திறப்பு

வல்வெட்டித்துறை நகரசபைப்பகுதி மக்களின் நன்மை கருதி பொதுசன நூலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறை நகரசபை செயலாளரை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பணித்துள்ளார்.

### போராட்ட

லின்படி பதவிநீக்கக் கடிதங்களை மேற்படி இருவரும் ஏற்க மறுத்ததாக தெரியவருகிறது.

தொண்டர்களது போராட்டம் தொடர்பான விசாரணையை தமிழீழக் காவல் துறையினர் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் இவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கு செயற் குழு முடிவெடுத்திருப்பதும் உரிய முறையில் கடிதம் சமர்ப்பிக்கப்படாததுமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (75)

### ஆறு தமிழர்

கிறது.

இதேவேளை நெலுக்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் சுற்றியுள்ள கிராமங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது.